# ஆழத்து முத்துக்கள் 167

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

# கலைவேந்தன் தைரியநாதன்

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் வசந்தகான சபாவில் பெண் பாத்திரங்கள் ஏற்று நடிக்க ஆரம்பித்து நடிகமணியின் மறைவுக்குப் பின்னர் அதே நாடகங்களில் கதாநாயகனாக நடித்துச் சிறப்புச் செய்தவர் கலைஞர் தைரியநாதன் அவர்கள். அருகிவரும் இசை நாடகக் கலைக்கு உயிரூட்டியவர்களில் மிகவும் முக்கியமானவர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் ஜுன் 05, 1949 அன்று பிறந்த தைரியநாதன் தனது 23வது வயதில் நடிப்புத்துறையில் கால் பதித்தார். இசை நாடகங்கள் வாயிலாக தன்குரல் வளத்தாலும் நடிப்புத்திறனாலும் தன் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த கலைஞர். சுன்னாகம் எம். கோபாலரத்தினம் என்ற ஆசிரியரிடம் முறைப்படி சங்கீதம் பயின்றவர். இவரே தன் முதல் வழிகாட்டி என்று தைரியநாதன் பதிவு செய்துள்ளார்.

சுன்னாகம் இளந்தென்றல் மன்றத்தின் பிரதான நடிகராகவும் பாடகராகவும் பிரசித்தி பெற்ற இவர் 1963ல் வணபிதா மரிய சேவியர் அடிகளாரின் 'ஆதாம் ஏவாள்' நாடகத்தில் ஏவாள் பாத்திரம் ஏற்று நடித்தார். 1969ம் ஆண்டு நடிகமணி வி.வி. வைரமுத்துவுடன் இணைந்து பல பெண் பாத்திரங்களை ஏற்று நடித்துப் புகழ்பெற்றார். நடிகமணியுடன் இனைந்து நடித்த சங்கரதாஸ் சுவாமிகளின் நவரச நாடகங்களும் அவர் ஏற்ற பாத்திரங்களும் வருமாறு:

| | |
|---|---|
| அரிச்சந்திரா | - சந்திரமதி |
| பூதத்தம்பி | - அழகவல்லி |
| நல்லதங்காள் | - அலங்காரி |
| ஞான சௌந்தரி | - லேனாள் |
| நந்தனார் | - பெரிய கிழவர் |
| பவளக்கொடி | - பவளக்கொடி |
| சத்தியவாள் சாவித்திரி | - சாவித்திரி |
| சாரங்கதாரா | - சித்திராங்கி |
| அல்லி அர்ச்சுனா | - அல்லி |
| கோவலன் கண்ணகி | - கண்ணகி |

ஈழத்து இசைநாடகத் துறையில் முதுகலைஞனாகவும் நடிகமணி வழிவந்த பட்டறிவாளனாகவும் நடிகமணியின் அடையாளமாகவும் வாழ்ந்தவர் தைரியநாதன் அவர்கள். தமிழர்களின் தேசியக் கலைச்சொத்தாகத் திகழ்ந்தவர். இனிமையான கம்பீரக் குரலும் அட்சரம் பிசகாத நடிப்பும் சுருதி, தாளம் தப்பாத இசைத்திறனும் அரங்கைத் தன்வசப்படுத்தும் ஆளுமையும் கொண்டதொரு மரபுவழிக் கலைஞன் இவர். நடிகமணி வைரமுத்து அவர்களின் காலத்தில் அவரோடு நூற்றுக்கணக்கான மேடைகள் கண்ட கலைஞராகவும் நடிகமணியின் மறைவுக்குப் பின்னர் அவரது பாணியில் இசை நாடகங்களை நிகழ்த்தியும் பெரும் புகழ் பெற்றவர் தைரியநாதன் அவர்கள்.

இவர் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கக்கூடிய வல்லுனராகத் திகழ்ந்தவர். நடிகமணியின் எந்த நாடகமானாலும் அதில் வரும் அனைத்துப் பாத்திரங்களினதும் வசனங்களும் பாட்டுக்களும் இவருக்கு மனப்பாடமாக இருந்தன. இதன் காரணமாக நாடகத்தில் எவராவது வரமுடியாமற் போகும் போதெல்லாம் அவர்களது பாத்திரங்களை ஏற்று நாடகத்தை ஒப்பேற்ற வல்ல கலைஞர். சிறிய, பெரிய என்ற பேதம் இல்லாமல் எந்தப் பாத்திரத்தையும் செய்கின்ற இயல்பான ஒரு கலைஞனாகத் விளங்கியவர் ஏனெனில் இசை நாடகம் அவரது உயிர் மூச்சாக இருந்தது.

திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்த தன் மூலம் இவரின் கலைப்பணி உச்சம்



பெற்றது என்று சொல்லலாம். வணபிதா மரியசேவியர் அடிகளாரின் நாடகங்களில் நடித்துத் தனக்கும் திருமறைக்கலாமன்றத்துக்கும் பெருமை சேர்த்தவர், மன்றம் மேடையேற்றிய ஐம்பெரும் காப்பிய நாட



கங்களில் வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பவற்றிலும் ஞானசௌந்தரி, சத்தியவேள்வி நாடகங்களிலும் கதாநாயகனாக நடித்துப் புகழ் பெற்றவர். கலைஞர் தைரியநாதன் அவர்கள் திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் உருவான திருப்பாடுகளின் காட்சிகளில் பல பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.

| | |
|---|---|
| களங்கம் | - வழக்கறிஞர் |
| சிலுவை உலா | - ஒருவன் |
| கல்வாரி பரணி | - இராயப்பர் |
| பலிக்களம் | - இராயப்பர் |
| சாவை வென்ற சத்தியன் | - பரிசேயர் |
| கல்வாரிச்சுவடு | - இராயப்பர் |
| அன்பில் கலந்த அமரகாவியம் | - இராயப்பர் |

என்பன திருப்பாடுகளின் காட்சிகளில் இவர் நடித்த பாத்திரங்களாகும்.

1997, 1998 காலப்பகுதிகளில் திருமறைக் கலாமன்றத்தின் 'வடலிக் கூத்தர்' கலைக் குழுவில் மிக முக்கிய வகிபாகம் ஏற்று எமது பாரம்பரியக் கலைகளை ஐரோப்பிய நாடுகள் வரை காவிவந்து கடத்துகை செய்த ஒப்பற்ற கலைஞர் இவர். பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் 'வடலிக் கூத்தர்'கலைக்குழுவினர் மேடையேற்றிய நாடகங்களான 'ஜெனோவா'வில் அரசனாகவும் 'சத்தியவேள்வி'யில் அரிச்சந்திரனாகவும் 'சகுந்தலை'யில் துஷ்யந்தனாகவும் இவர் நடித்திருந்தார்.

திருமறைக் கலாமன்றத்தினர் எமது பாரம்பரிய இசை நாடகக்கலையைப் பாதுகாக்கும் நோக்கில் வெளியிட்ட 'ஈழத்து இசை நாடகப் பாடல்கள்' என்ற ஒலித்தொகுப்பில் அநேகமான பாடல்களை தைரியநாதன் அவர்கள் பாடியிருந்தார். அழியாத பொக்கிசமாக அவர் பாடிய இசை நாடகப் பாடல்கள் என்றும் இருக்கும். இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சிக்காகப் பதிவு செய்யப்பட்ட திருமறைக்கலாமன்றத்தின் நாடகங்களான ஞானசௌந்தரி, ஏரோதன் ஆகிய நாடகங்களில் முறையே பிலேந்திரன், ஏரோதன் ஆக இவர் நடித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடக ஒலிபரப்பில் இவர் நடித்த ஞானசௌந்தரி, பக்தநந்தனார், அரிச்சந்திரா என்பன இடம்பெற்றிருந்தன. அரிச்சந்திரா நாடகத்தில் வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனாகவும் செல்வம் சந்திரமதியாகவும் தைரியநாதன் சத்திய கீர்த்தியாகவும் நடித்திருந்தனர். 2010ம் ஆண்டு ஆவணப்படுத்தப்பட்ட பூதத்தம்பி என்னும் இசைநாடகக் காணொளி உருவாக்கத்திலும் இவர் பங்குபற்றியிருந்தார்.

ஆற்றுகையாளனாக மட்டுமல்லாது இசை நாடகங்களை அற்புதமாகக் கற்பிக்கும் பேராற்றல் கொண்ட ஆசானாகவும் நெறியாளராகவும் இவர் திகழ்ந்தார். 1978ல் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'சத்தியவான சாவித்திரி' நாடகத்தை நெறியாள்கை செய்திருந்தார். பல பாடசாலைகளிலும் மன்றங்களிலும் சனசமூக நிலையங்களிலும் ஆலயங்களிலும் இசை நாடகங்களை பழக்கிய பெருமைக்குரியவர். ஒப்பனை செய்வதிலும் வல்லவரான இவர் ஹார்மோனியம் வாசிப்பதிலும் சிறந்து விளங்கினார்.

1970ம் ஆண்டு நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலின் 'நடிப்பிசைச் செல்வன்' என்ற பட்டத்தை ஆசிரியர் அண்ணாச்சாமி இவருக்கு வழங்கிக் கௌரவித்தார். திருமறைக் கலாமன்றத்தினரால் 'கலைவேந்தன்' என்ற பட்டம் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார். இவரது கலை ஆற்றலை மெச்சி பல்வேறு மேடைகளில் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்யப்பட்டார்.

இவரது கலைப்பணியில் இவரது குடும்பமே இணைந்து செயற்பட்டது. தான் சிறப்பம் சமாகும். பிள்ளைகள் எல்லோரும் இவரைப் போலவே இசை நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் என்பவற்றில் சிறந்து விளங்கிவருகின்றனர். பிரபலமான இளம் கூத்துக்கலைஞர் ஜஸ்டின் தைரியநாதன் இவவது மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேடைகளில் அரிச்சந்திரனாகத் தோன்றி இவர் பாடும் 'பிறந்ததும் மண்மேல், இறப்பதற்கென்றே' என்ற பாடலைப் போல் பல்வேறு இனிமையான இசை நாடகப் பாடல்களைப் பாடி எம்மை மகிழ்வித்த கலைஞன் தைரியநாதன் அவர்கள் 16.05.2017 அன்று இயற்கை எய்தினார்.

ஈழத்து இசை நாடக வரலாற்றில் தனிமுத்திரை பதித்து, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேர இசை நாடகக் கலைஞனாக வாழ்ந்து, தன்னையும் தனது குடும்பத்தையும் நாடகக் கலைக்கென்றே அர்ப்பணித்த மாபெரும் இசை நாடகக் கலைஞன் கலைவேந்தன் தைரியநாதன் அவர்களது நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.



sriskandan@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**